# கருணை - KARUNAI
## தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2050
1st Jan 2020
வருட சந்தா ரூ. 50 மட்டும்

கடவுள் நம்பிக்கை,
ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்
*Volume : 10 Issue : 2*

**உரிமை மற்றும் பதிப்பாளர்:**
திருமதி. இராமலெட்சுமி இளங்கோ M.A.,
செல் : 8778874134

**ஆசிரியர்:**
திரு. **A.G.சந்திரமோகன்**
செல் : 9442038770

**உதவி குழு:-**
திரு. **G.சுப்பிரமணியன்**
செல் : 9842818242
திரு. **M.கண்ணன்** B.L.,
திரு. **S.சசாங்கன்**
திரு **M.ரவிச்சந்திரன்**

**கௌரவ ஆலோசகர்:**
தயவு.திரு. **P.சுப்பாராஜ்** M.A.B.L.
திரு **சாதுசிவராமன்**
திரு **K.S.சகாதேவராஜா**

**Place of Publication**
Karunai Sabai Salai Buld,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.


## தலையங்கம்

ஒழுக்கம், தகுதி;
பொதுநோக்கம், சேவை;
நெறி, அருள்;
இவைகளுக்கு முறையே;
திருவள்ளுவர்,
காந்தியடிகள்,
வள்ளலார்
இவர்கள் வழியில் பயணித்தாலே போதும்.

நமது குழந்தைகளுக்கு திருக்குறள், சத்தியசோதனை, சமரச சுத்த சன்மார்க்க நெறி இவை குறித்த புத்தகம், பாடல்கள் நாம் வெளிப்படுத்த வேண்டிய கடமையில் உள்ளோம் என்பதை சான்றோர்கள், பெரியவர்கள், பெற்றோர்கள் ஆகிய நாம் அறிந்து செயல்படுவோம்.

**- ஏபிஜெ அருள்**

**கருணை இதழின் இனிய ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்**



# வள்ளலார் கண்ட "மெய்ஞ்ஞான யோகா"

- ஏபிஜெ. அருள்

அன்பர்களே,

"யோகா" வை பற்றிய தேடுதல் மற்றும் அதில் பயிற்சி எடுத்தலில் நாம் இன்று மிகவும் ஆர்வமுடன் உள்ளோம். யோகா தோன்றிய காலம் இதுவென வரையறுத்து கூற முடியவில்லை. இங்கு தமிழ் சித்தர்கள் தொடங்கி அகத்தியர், பதஞ்சலி, திருமூலர் முதலிய ஞானிகளை தொடர்ந்து இன்று பல மார்க்கங்களின் தலைவர்கள் வரை வெளிப்பட்டுள்ளது. 'ஓகம்' என்பது யோகாவின் முதல் சொல் என்கிறார்கள் தமிழ் சித்தர்கள் தம்மை சுற்றி நடக்கும் இயற்கை நிகழ்வுகளை கூர்ந்து கவனித்து மற்ற உயிரினங்களின் செயல்பாடுகள் அவற்றின் இருக்கை நிலைகளை கண்டு அதே போல் பயிற்சி எடுத்து தங்கள் உடல் ஆற்றலை பெருக்கி ஆயுட்காலத்தை நீட்டித்துக்கொண்டு வாழ்ந்தனர். தவ முனிவர்களின் இருக்கையை குறித்து நற்றிணைப் பாடல் குறிப்பிடுகிறது. கையூன் இருக்கை, உயிர்ப்புப் பயிற்சி எனப் பெயர்களை கொடுத்துள்ளார்கள் என்கிறார்கள்.

ஆன்மீக ரீதியாகவும் இந்த ஓக (யோக்) முறை தொடர்ந்து விரிவடைந்து உள்ளது. மனதை நேர்வழிப்படுத்தி தவம், தியானம் செய்து தங்களை முக்திப்படுத்திக் கொண்டனர். சமாதிநிலை அடைய உள்ளத்தை பக்குவப்படுத்திக் கொள்ளும் யோகக்கலையையும் கண்டனர்.

அதன்பின்பு காணும் இயற்கைக்கு அப்பாற்பட்டு விளங்கும் சக்திகளை உணரக்கூடியளவு என யோகப்பலனை மேலும் விவரிக்கின்றனர்.

புத்தமதத்தில் இந்த யோகமுறை பல யானாக்களாக பிரிக்கப்பட்டுள்ளது. ப்ராணா மற்றும் மனது இரண்டையும் ஒன்றுபடுத்தும் தந்திரங்களின் அணுகுமுறையை வகுக்கும் பயிற்சி என்கிறது.

சமண மதத்தில் மனது, பேச்சு மற்றும் உடலின் ஒட்டுமொத்த நடவடிக்கை என்கிறது. இதில் ஞானிகள் பல இருக்கை பயிற்சிகளை வெளிப்படுத்தி உள்ளனர்.

பதஞ்சலி மாமுனி, வெளிப்பட்டிருந்த பலயோக வகைகளை திரட்டி தொகுத்து யோக சாஸ்திரத்தில் வழங்கினார்.

ஆக, ஓகம் (யோகம்) ஆரம்ப காலத்தில் உடல் வலிமைக்கு ஏற்படுத்தப்பட்டு அதன்பின்பு ஆயுள் நீட்டிப்புக்கு விரிவுபடுத்தி அதன்பின்பு ஆண்டவர் நோக்கிய தவத்திற்கு மற்றும் மனம், உள்ளம், ஆன்மா இவை ஒன்றுபடுதலுக்கான பயிற்சியாக மேம்பட்டு இன்று பல வகையில் வெளிப்பட்டு உள்ளது. உடல்நலத்துக்கான உடற்பயிற்சியாகவும், உள்ளம், எண்ணம், அமைதிப்பட்டு விளங்க முயற்சியாகவும், முக்தி, சமாதி என்ற யோகி நிலையிலும் யோகா விரிவடைந்து வெளிப்பட்டது, வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இதன் வரிசையில் இதுவரை வெளிப்பட்ட பல வகை யோகப் பயிற்சி சாதனங்களை ஒதுக்கிவிட்டு, அறிவால் அன்பால் உள்ளத்திலே நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து பணிந்து இரக்கம் கண்ணீர் விட்டு உண்மை கடவுள் நிலைகாணும் ஓர் "ஏக மெய்ஞ்ஞான யோகம்" என்ற முறையை 19ம் நூற்றாண்டில் திருவருட்பிரகாச வள்ளாலார் வெளிப்படுத்தி உள்ளார்கள். "மெய்ஞ்ஞான யோகம்" குறித்து ஒருவாறு இந்நூலில் விசாரம் செய்வோம்.

எல்லாம் வல்ல திருவருட்பிரகாச வள்ளலார் துணை நின்று மெய்ஞ்ஞான யோகம் உள்ளவாறு நம்முள் வெளிப்படட்டும்.

சன்மார்க்கங்கள் இரண்டு, அவை;

'சமய சன்மார்க்கம்', 'மத சன்மார்க்கம்'. மூன்றாம் மார்க்கமாக "சுத்த சன்மார்க்கத்தை" பூரணமாக 19ம் நூற்றாண்டில் 1871ம் ஆண்டில் மக்களிடையே வெளிப்படுத்தினார் திருவருட்பிரகாச வள்ளலார். தான் கண்ட சுத்த சன்மார்க்கத்தில் ஓர் உண்மைக் கடவுளை கண்டு தரிசித்ததாகவும், இந்த கடவுள், வெளிப்பட்டிருந்த சமய சாத்திர புராணங்களில் சொல்லப்பட்டுள்ள கடவுளரோ, கர்த்தரோ, மூர்த்திகளோ, தேவர்களோ, அடியார்களோ, யோகிகளோ, ஞானிகளோ முதலானவர்களில் ஒருவரல்ல என்கிறார் வள்ளலார். இந்த உண்மை பொது வழியாம் சுத்த சன்மார்க்கத்தை ஆண்டவரே தனக்கு வெளிப்படுத்தி அதன் மரபுகளை விளக்கினார் என்கிறார் வள்ளலார். தனது விடாமுயற்சியில் ஒருவராகிய உண்மை கடவுளை கண்டு அவர் அருளால் சாகாக்கல்வி பயின்று மரணமில்லா பெருவாழ்வை பெற்றதாக சத்தியமிட்டு வெளிப்படுத்துகிறார் வள்ளலார். மெய்ஞ்ஞான யோகத்தின் மூலம் இப்பெரும்பயனை சாகாவரத்தை எல்லாம் வல்ல ஆண்டவரிடத்தில் பெற்றதாக கூறுகிறார் வள்ளலார்.

## சமய மத மார்க்க யோகா மற்றும் வள்ளலார் கண்ட யோகம்

பொதுவாக ஞானிகள், மகான்கள் யோகமுறையில் தங்களை ஆட்படுத்தி ஆசனம் அமைத்து மூச்சுப் பயிற்சி, மந்திரதந்திரங்கள் மூலம் தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும் மேலும் தத்துவாதீததாதீதத்தை தியானித்தும் ஜபித்தும் வந்தனர். மேலும் ஜபித்தல், விரதம் இருத்தல் சாதாரண யோக பாகத்தில் மூச்சடக்கியும் இவை போன்று சாதனமாக செய்தனர்.

ஆனால், வள்ளலாரின் மெய்ஞ்ஞான யோகத்தில் தத்துவங்கள் மற்றும் தத்துவாதீதாதீதத்தை அர்ச்சிப்பது, தியானிப்பது ஜபிப்பது கிடையாது. விரதம், யோகம் இவையும் அல்ல.

இந்திரிய, கரண, ஜீவஅறிவு கடந்து நேரிடையாக ஆன்ம அறிவை கொண்டு செய்யப்படும் நன்முயற்சி பயிற்சி என்கிறார் வள்ளலார். ஆன்மஅறிவு என்பது "உண்மையறியும் அறிவு".

ஆம், என் மார்க்கம் (வழி) அறிவுமார்க்கம் சுத்தசன்மார்க்கத்தில் அக அனுபவமே உண்மை என்கிறார் வள்ளலார்.

முன்பு வெளிப்பட்டிருந்த எந்தொரு சாதனமும் கடவுளின் உண்மை நிலையை கண்டு, அக்கடவுளின் அருளை பூரணமாக பெற்றுத்தரவில்லை என்கிறார் வள்ளலார்.

தனக்கு முன்பு வரை எல்லாம் வல்ல ஆண்டவரை நோக்கி, யோகிகள் ஞானிகள் தவம் செய்து பெற்றுக்கொண்ட சித்திகள் யாவும் "நித்திய வாழ்வை" அளிக்கவில்லை.

அவத்தைகளை நீக்கி பூரண விளக்கம் பெறாமல் நித்திய வாழ்வை பெற முடியாது. மேலும் உண்மை கடவுளின் நிலைகாட்டும் கருணையின் விருத்திக்கு சாதி சமய கட்டுப்பாட்டு ஆசாரங்கள் தடையாக உள்ளன என தெரிந்துகொண்ட வள்ளலார் தனது பற்றுகள் அனைத்தையும் முற்றிலும் பற்றற கைவிட்டார். தனது இடைவிடாது நன்முயற்சியில் "மெய்ஞான யோகப்பயனால்" நித்திய தேகத்தை கடவுள் அருளினார் என்கிறார் வள்ளலார்.

அவரவர்கள் கொண்டிருந்த நன்முயற்சி மற்றும் தவ விரத தியானத்தினால் பல சித்திகள் பெற்று மகிழ்ந்திருந்தனர். முக்தி சமாதி அடைந்து முடிவில் வாழ்வை முடித்துக்கொண்டனர். ஆனால், வள்ளலாரோ; தனது அறிவு, எல்லாம் வல்ல ஆண்டவரின் நிலையை பூரணமாக காண ஆசை கொண்டிருந்தது என்கிறார் வள்ளலார். சுத்தசன்மார்க்கத்தின் கொள்கை எதுவென அவர் விளக்கும் போது

"சர்வசித்தியுயை கடவுள் ஒருவரே உண்டென்றும்,

அவரை உண்மை அன்பால் வழிபாடு செய்து பூரண சித்தியை பெறுவது" என்கிறார்.

சுத்த சன்மார்க்கத்தின் முடிபு என்பது;

சாகாத கல்வியை தெரிவிப்பதேயன்றி வேறில்லை. சாகுகின்றவன் சன்மார்க்க நிலையைப் பெற்றவனல்லன். சாகாதவனே சுத்தசன்மார்க்கி என்கிறார் வள்ளலார்.

சுத்தசன்மார்க்கம் ஆகிய "மெய்ஞ்ஞான யோகம்"

மெய்ஞ்ஞான யோகப்பயிற்சி எதற்கு செய்ய வேண்டும் என முதலில் தெரிந்துகொள்வது அவசியம்.

1. நித்திய தேகம் பெறுவதற்கு.

2. பிண்ட அண்ட திறங்கள், அறிந்துகொள்வதற்கு

மேற்படி 1 & 2ம் இறையருளாலே பெற்றேன் என்று வள்ளலார் கூறுகிறார்கள். எனவே உண்மை ஆண்டவரின் நிலைகண்டு அவர் அருள்பெறுதலே இங்கு லட்சியமாக உள்ளது.

மேற்படியான நித்திய தேகத்தையும், அருள்வடிவநிலையையும் இதுவரை வெளிப்பட்ட சாதனங்கள் மற்றும் யோக முறைகளில் தெரிந்துகொள்ள அறிந்துகொள்ள முடியவில்லை, முடியாது என்கிறார் வள்ளலார்.

**சாதனம் :**

முதலில் மெய்ஞ்ஞான யோகாவின் சாதனம் எதுவெனில் "நினைப்பு மறைப்பற்று நிரதிசயானந்தமாய் அருள்வடிவ மாவதே சாதனம்" என்கிறார் வள்ளலார்.

நிரதிசயானந்தமாய் அருள்வடிவம் ஆவதே "அறிவு" என்கிறார் வள்ளலார்.

இங்கு அருள்வடிவம் என்பது கடவுளின் உண்மைதன்மை கண்ட நிலை, மற்றும் கடவுள் அருளால் சாகாவரம் பெற்ற நிலை. இந்நிலை அடைவதற்கு நாம் தயா வடிவமாக வேண்டும்.

"தயவு எனும் கருணை தான் என்னை ஏறாநிலையிசை ஏற்றிவிட்டது என்கிறார் வள்ளலார்".

ஆக, தயவு (கருணை) நாம் பெற்றிருந்தால் தான் நினைப்பு



மறைப்பற்ற நிரதிசயாயனந்தமாய் அருள்வடிவம் ஆகலாம்.

தயவு எனும் கருணை என்பது;

எல்லா உயிர்களிடத்தும் தயவும் ஆண்டவரிடத்து அன்புமே! இதுவே சாதனம்.

**மெய்ஞ்ஞான யோகாவிற்கான அடிப்படைத் தகுதிகள் :**

"உண்மை" தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசை உள்ளவர்கள் மட்டுமே இவ்யோகப் பயிற்சியினை மேற்கொள்ள முடியும்

அந்த உண்மையை நமக்கு தெரிவிக்க வேண்டியவர் ஆண்டவரே என்பதை சத்தியமாக நாம் முதலில் தெரிந்துக்கொள்ள வேண்டும்.

நமக்குண்மை தெரியவெட்டாது மறைத்துக்கொண்டிருக்கும் பல திரைகளை நீக்க வேண்டும்.

மேற்படி மறைப்பு திரைகள் நீங்க வேண்டி ஆண்டவரிடமே நேரிடையாக நாம் ஒவ்வொருவரும் விண்ணப்பித்து முறையீடு, வழிபாடு செய்தல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

ஆண்டவரை, ஸ்தோத்திரித்தும், நினைத்தும் வழிபாடு செய்தல் வேண்டும். மனதில் இக விசாரமின்றி பர விசாரிப்புடன் வழிபாடானது ஆன்ம நெகிழ்தலோடு இருத்தல் கூடும்.

இங்ஙனம், இடைவிடாது நன்முயற்சியின் கண் பயிலுதல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

"மெய்ஞ்ஞான யோக முறையில்

தெய்வத்தை தெரிந்து கொள்ள வேண்டும்.

நித்திய வாழ்வை பெறுதல் வேண்டும்" என்பதே லட்சியம்.

ஆண்டவரை உள்ளபடி அனுபவித்தால் அன்றி ஆண்டவரிடம் பிரியம் வராது என்கிறார் வள்ளலார்.

ஆதலால், ஆண்டவரிடத்தில் அன்பு செலுத்த ஆண்டவரின் நிலையை தெரிந்துகொள்ள வேண்டும். ஆண்டவரின் நிலை காண்பதற்கு "விசாரம்" செய்ய வேண்டும்.

ஞானத்தில் யோகம் செய்ய சொல்லுகிறார் வள்ளலார், இதுவரை வெளிப்பட்டுள்ள எந்தொரு "யோக முறையையும்" வள்ளலார் இங்கு குறிப்பிடவில்லை. அவற்றை செய்ய வேண்டுவதில்லை எனத் தெளிவாக அறிவுறுத்தி உள்ளார்கள். அதில் அழுந்தி விட்டால் மீளுவது கஷ்டம். மூடம் உண்டாக்கும் என்கிறார் வள்ளலார்.

நல்ல விசாரணை செய்வதே "மெய்ஞ்ஞான யோகா". இடைவிடாது விசாரம் செய்தல் வேண்டும். இவ்விசாரம் அண்ட விசாரம், பிண்ட விசாரம் என இரண்டு

அண்டத்தில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகள் எப்படிப்பட்டன? இவைகளினுடைய சொரூப சுபாவம் என்ன? என்ற அண்ட விசாரமும்,

பிண்டத்தில் நாம் யார்?

இத்தேகத்தின் கண் புருவம் கைம்மூலம் இவைகளினும் இவை போன்ற மற்ற இடங்களிலும் உரோமம் உண்டாவானேன்? நெற்றி முதலான இடங்களில் அது தோற்றாதிருப்பதென்ன?

கால் கைகளிலுள்ள விரல்களில் நகம் முளைத்தலும், அந்நகம் வளர்தலும், மேலும்

மற்ற தத்துவங்களினது சொரூப ரூப சுபாவங்களும் என்னவென்று பிண்ட விசாரம் செய்தல் வேண்டும்.

மேற்படியாக ஞானத்தில் இவ்யோகப் பயிற்சி (விசாரம்) தொடர்ந்து செய்வது நம்மிடையே "நிராசை" என்னும்படி உண்டாகுகிறது என்கிறார் வள்ளலார்.

ஞானயோக அனுபவ நிலைகள் என கீழ்வருபவையை குறிப்பிடுகிறார்.

1. படிகமேடை 2. 1008 கமல இதழ்

3. ஓங்கார பீடம் 4. குண்டலி வட்டம்

5. ஜோதி ஸ்தம்பம் 6. சுத்த நடம்

இவற்றை அனுபவத்தினால் அறிக.

இஃது நிராதர லக்ஷணம். சுத்த சன்மார்க்கத்திற்கு அனுபவ ஸ்தானங்கள் கண்டத்துக்கு மேல். சமாதிப் பழக்கம் பழக்கமல்ல. சகஜப் பழக்கமே பழக்கம் என்கிறார் வள்ளலார்.

<u>மெய்ஞ்ஞான யோக அனுபவங்களின் உண்மை பொருள் : -</u>

சாகாத்தலை, வேகாக்கால், போகாப்புனல் மூன்றும் பரமார்க்கமாகிய 'ஞானயோகக் காட்சியில்' உண்டாகும் யோக அனுபவங்களின் உண்மைப்பொருள்.

மேற்படி உண்மை. நீக்கமற்ற சொரூப ஞானத்தைத் தரும் என்றறிக. சுத்தசன்மார்க்கத்திற்கு உபாய வகைகளான அபரமார்க்கக் காட்சி கூடாது, பரமார்க்கமாகிய அக அனுபவமே உண்மை. உபாய வகையை நம்புதல் கூடாது. உண்மையை நம்புதல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

என் மார்க்கம் உண்மை அறியும் மார்க்கம் என்பார் வள்ளலார். உண்மையை அறிய எல்லா ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் ஆசையும் முயற்சியும் இருந்தது.(உண்மை). ஆனால் அவர்கள் சொற்ப சித்திகளே பெற்றனர். இறைவனின் அடிமுடியானது, உள்ளம் அறிந்திட முடியாத ஒன்று என முடிவு செய்து இருந்து விட்டு நீண்ட வாழ்வில், ஞானிகள், யோகிகள் வாழ்ந்தனர். இறைவனின் உண்மை சொரூப நிலையை அவர்கள் கண்டிடவில்லை. நித்திய தேகத்தை கண்டிடவும் இல்லை வாழ்ந்து இறுதியில் முத்தி சமாதி அடைந்து வாழ்வினை முடித்துக் கொண்டனர் என்கிறார் வள்ளலார்.

**சமயம் - மதம் - சுத்த சன்மார்க்கம்**

சமயம் என்பது ;

சத்துவ குணத்தின் வாச்சியானுவம் பெற்று சொரூப அனுபவம் .

மதத்தில் - மேற்படி சமய அனுபவம் பெற்று லட்சிய அனுபவம் பெறுதல்.

மொத்தத்தில் ;

**சமய சன்மார்க்கம் என்பது**

சத்துவ குணத்தின் சம்பந்தமுடையது.
சத்துவ சம்பந்தமுடைய வழிகள், இயல்புகள் மற்றும் முடிவு :
சத்போதம் – கொல்லாமை, வாச்சியானுபவம்,
சத் கர்மம் – பொறுமை பெறுதல்
சத் சங்கம் – சாந்தம், சொரூப
சத் காலம் – அடக்கம், அனுபவாகிய
சத் விசாரம் – இந்திரிய நிக்கிரகம் சாதனம்
சத் பாத்திரம் – ஜீவகாருண்யம்
சற் சனம், சற் செய்கை

**மத சன்மார்க்கம் என்பது**

மேற்படி சத்துவ குணத்தின் வாச்சியானுபவம் பெற்று நிர்குண லட்சியானுபவம் பெறுதல்.

வழிகள் அனுபவம்

1. தன்னடிமையாகப் பலரையும் பாவித்தல் சோகம்

2. புத்திரனாகப் பாவித்தல் சிவோகம்

3. சிநேகிதனைப் போல பாவித்தல் தத்வமசி

4. தன்னைப் போல் பாவித்தல் சிவத்துவமசி

மதத்தில் முடிவு.

தான் கடவுளுக்கு அடிமையாதல்

கடவுளுக்கு புத்திரனாதல்

கடவுளுக்கு சிநேகனாதல்

கடவுளே தானாதல்

**ஆனால் சுத்த சன்மார்க்கம் என்பது :**

மேற்குறித்த சமய மத அனுபவங்களை கடந்தது.

பொருள் : பூர்வாதி உத்தரோத்ர பரியந்தம் (பூர்வம் பூர்வா பூர்வம் உத்தரம் உத்தரோத்ரம்)

லட்சியம் அனுபவஸ்தானம் : சுத்த சிவ துரியாதீத நிலை (பெறில் விளங்கும்)

நன்றி APJ.அருள்

..... தொடரும்

2020 வருக! வருகவே!!
ஆம், இப்புத்தாண்டில் வெளிப்படும் உண்மை 20ம்
இல்லாமல் போகும் 20ம்.
– ஏபிஜெ அருள்

## வெளிப்படும் – வெளிப்படுத்த வேண்டிய உண்மை 20

1) திருவருட்பிரகாச வள்ளலாரின் ''சுத்த சன்மார்க்கம்''

2) எல்லா சமயங்களுக்கும் எல்லா மதங்களுக்கும் எல்லா மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியே ''சுத்த சன்மார்க்கம்.

3) ஓர் உண்மை கடவுள் ஒருவரே!

4) உண்மை கடவுளை, உண்மை அன்பால், கருத்தில் கருதி வழிபாடு செய்தல் .

5) காலத்தை வீண்போது கழிக்காமல் தனிப் பெருங்கருணை கடவுளின் திறத்தை அறிந்திட, கடவுளின் திருவருளால் மட்டுமே முடியும் என்பதால் உண்மை கடவுளை துதித்து வேண்டுதல்.

6) நமது கருத்தின் கண் கடவுளின் திருவருள் வெளிப்பட்டு விளங்குவதே ஆண்டவர் அருள். அவ்வருளுக்கு கடவுளை நினைந்து,உணர்ந்து, நெகிழ்ந்து அன்பு நிறைந்து ஊற்றுழும் கண்ணீரால் உடல் நனைந்து தொழுதல் வேண்டும்.

7) அவத்தைகளை நீக்கி மரணமில்லா பெருவாழ்வில் வாழ ஆசைக் கொள்ளல்.

8) பேரின்ப சித்தியை அடைவித்தல் பொருட்டே நம்முள் திருவருள் நடம் செய்யும் உண்மையை உணர்த்தி அருள துதித்தல் வேண்டும்.

9) கடவுளின் அருளை பெற்றுத் தரும் ஒரே சாதனம் ''கருணை'' ஒன்றே. கருணை என்பது; எல்லா உயிர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்தில் அன்புமே.

10) கருணை நம்மில் விருத்தியாகாமல் தடை செய்பவை சாதி சமய கட்டுபாட்டு ஆசாரங்களே என்ற வள்ளலார் கண்ட உண்மையை தெரிந்துகொள்ளல் .

11) ஜாதி, குல, ஆசிரம, லோக, தேச, கிரிய, சமய, மத, மரபு, கலா, சாதன, அந்த, சாஸ்திர முதலிய ஆசாரங்களை விட்டொழித்தல்.

12) சுத்த சன்மார்க்கசத்திய ''ஞான ஆசாரம்'' பெற்று பொது நோக்கம் வருவித்துக் கொள்ளல்.

13) நம்முள்(பூர்வ ஞான சிதம்பரத்தின் வடபால் உத்தர ஞான சித்திபுரம்) ஓர் ஞானசபை காணுதல்.

14) ஞானசபை தோன்றி விளங்க வைத்து அருள வேண்டி துதித்தல். உள்ளழுந்தி, சிந்தித்து, சிந்தித்தை விசாரிக்கும் நன்முயற்சி பயிற்சியை இடைவிடாது செய்தல்.

15) ஞானசபையில் ஆண்டவர் அமர்ந்து அருளும் பொருட்டு ஞானசபையை அலங்காரம் செய்யும் திருப்பணியை முற்றுவிக்க செய்து வேண்டுதல்.

16) நம் ஞானசபையில் உண்மை கடவுளின் சொரூபம் தரிசித்து, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரிடத்தில் அற்புத திரு விளக்கத்தை தந்திட வேண்டுதல்.

17) திருவருள் விளக்கம் என்பது; எங்களையும் இவ்வுலகத்தில் இத்தேகத்தை பெற்ற மற்றவர்களையும் உண்மை அடியார்களாக்கி உண்மை அறிவை விளக்கி உண்மை யின்பத்தை அளித்து சமரச சுத்த சன்மார்க்க நிலையில் வைத்துச் சத்திய வாழ்வை அடைவித்து நித்தியர்களாக்கி வாழ்தல். இதுவே ஆசை.

18) ''ஆசை உண்டேல் வம்மீன்'' ; என் மார்க்கம் இறப்பை யொழிக்கும் மார்க்கம்; சுத்த சன்மார்க்கத்தில் '' சாகா கல்வி''யை தவிர வேறு ஒன்றுமில்லை என்ற திருவருட்பிரகாச வள்ளலாரின் சத்திய வாக்கியத்தினை உள்ளது உள்ளபடி தெரிந்துக் கொள்ளுதல்.

19) சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காமகுரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும், கொலை புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்களே சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள் என்பதை தெளிவு பட தெரிந்துக் கொண்டோம்.

20) அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

2020 வருக! வருகவே!!

20-20ல் என்னுள் வெளிப்படவேண்டிய உண்மை 20 தெரிந்துக் கொண்டேன். உண்மை ஒளியில் ஒழிய வேண்டிய 20 (இருள் மாயை) விலகியது.

**அன்புடன் : ஏபிஜெ அருள்**

# ஆன்மீகத்தில் குழப்பங்கள்.
# அரசியலில் சச்சரவுகள்.
# உலகில் தீவிரவாதங்கள்.
# இவை அனைத்துக்கும்
# ஒரே தீர்வு இதுவே.

- ஏபிஜெ அருள்.

ஆம் இவைக்கு ஒரே தீர்வு 'வள்ளலாரின் சுத்த சன்மார்க்கமே'.

ஆன்மீகத்தில் குழப்பங்கள்

எங்கள் சமயமே, எங்கள் கடவுளே சரி என்பதும், இவரே கடவுள், இதுவே முடிவு என அவரவர் வரையறுத்து கொண்டிருப்பதுமே ஆன்மீகத்தில் குழப்பங்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணம்.

ஆனால் சுத்த சன்மார்க்கத்தில் இந்த குழப்பமே ஏற்படாது. ஏற்பட்டுள்ள குழப்பத்தையும் தீர்த்து வைக்கும். நீங்களே பாருங்களேன்.

இங்கு கடவுளின் உண்மை நிலை நம் உள்ளத்தில் காணுதலே நம் முயற்சியும் பயிற்சியும். அது வரை நாம், 'ஓர் உண்மை கடவுள் உண்டென்றும் உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபடச் செய்ய சொல்லுகிறது சுத்த சன்மார்க்கம்.'

அடுத்து

அரசியலில் சச்சரவுகள்:

'ஒழுக்கம்' நிரப்பி கொள்ள வேண்டும் என்றும், இதுவே கடவுளின் அருளை பெற்றுத் தரும் என்கிறது சுத்த சன்மார்க்கம். ஒழுக்கம் உள்ளவர்களால் சச்சரவு ஏது ?

அடுத்து

தீவிரவாதங்கள்:

எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிப்பது தான் இங்கு சாதனமாக வைக்கப்பட்டு உள்ளது. ஆன்ம நேய ஒருமைப்பாட்டு உரிமையே இங்கு லட்சியம் ஆகும். இந்நிலையில் தீவிரவாதம் ஏது ?

ஆக, உண்மை அறிவு, உண்மை அன்பு, உண்மை இரக்கம் பெறுவதினால் ஆன்மீகத்தில் குழப்பங்கள், அரசியலில் சச்சரவுகள், உலகில் தீவிர வாதங்கள் இவை ஒழிந்து பொது நோக்கம் தழைத்து ஓங்கும்.

நாம் இப்பொழுதே சுத்த சன்மார்க்கம் சாருவோம். நம்மை போல்

எல்லாரும் இன்புற்று வாழ சுத்த சன்மார்க்கத்தை உலகத்தார் அறிய இன்றே பரப்பிடுவோம். **நன்றி : ஏபிஜெ அருள்.**

# 'மகாபேருபதேசம்' சிறப்பு மற்றும் முக்கியம். எங்ஙனம்?

**- ஏபிஜெ அருள்.**

146 வருடத்திற்கு முன்பு அக்டோபர் 22ம் நாளில் ஐப்பசி 7 ல் வடலூர் சித்தி வளாகத்தில் வள்ளலார் சொன்ன உண்மை என்ன?அந்த 'உண்மை' தெரிந்து கொள்ள முதலில் படிக்க வேண்டியது: "மகாபேருபதேசம்"




சாதாரண மக்கள் 'எளிதான முறையில்' அறிந்து கொள்ளும் வகையில் மற்றும் அறிவு சான்றோர்களை 'ஆழமாக சிந்திக்க' வைக்கும் வகையிலும் அமைந்துள்ளதே வள்ளலார் 22/10/1873ல் (ஐப்பசி 7)ஆற்றிய மகாபேருபதேசம் ஆகும்.

வள்ளலாரின் முடிபான சுத்த சன்மார்க்கம் குறித்து அறிய விரும்பி வரும் அன்பர்கள் முதலில் வாசிக்க வேண்டியது இந்த உபதேசம் ஆகும்.

இது சுத்த சன்மார்க்கத்தின் மிக முக்கிய ஆவணம் ஆகும்.

காரணம்;

1. வள்ளலார் சமயப்பற்றை முற்றிலும் கைவிட்டு விட்டு சுத்த சன்மார்க்க நெறியை மக்களிடத்தில் (2 1/2) இரண்டரை வருடங்களாக சொல்லி வருவதாக அறிவித்த குறிப்பு .

2. தனது மார்க்கத்தின் மகாமந்திரத்தை இதில் வெளிப்படுத்தியது.
   'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
   தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி

3. சுத்த சன்மார்க்கத்திற்கென தனி 'கொடி' வெளிப்படுத்தி அக்கொடியை ஏற்றி, ஆற்றிய உரையே இப்பேருபதேசம்.

4. 'நான் சமயத்தில் வைத்திருந்த லக்ஷியமே என்னை இந்த நிலைக்கு (முடிவான கொள்கைக்கு) தூக்கி விட்டதென்றாலோ, அந்த லக்ஷியம் தூக்கி விடவில்லை' என்ற அழுத்தமான பதிவு.

5. தான் கண்டு வெளிப்படுத்திய முடிபான தனி நெறி (சுத்த சன்மார்க்கம்) பற்றி அன்றைய அன்பர்கள் எந்தளவு தெரிந்துக் கொண்டிருந்தார்கள் என்பதையும் பதிவு செய்துள்ளார்.

அது; 'உண்மை சொல்ல வந்தேனனே என்று உண்மை சொல்லப் புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை' எனவும் தெரிவித்தார் வள்ளலார்.

அன்பர்களே,

வள்ளலார் சொல்லிய அந்த உண்மை தான் என்ன? என்பதையும் இதில் காணலாம்.

உண்மை வெளிப்படுத்தும் அந்த வார்த்தை;

'தயவு'. அந்த தயவுக்கு 'ஒருமை' வரவேண்டும். ஒருமையில் தான் தயவு வரும் என்கிறார் வள்ளலார்.

''ஒருமை'' என்றால் ?

(உ.ந.பக்கம் 414-ல்) வள்ளலார் விளக்கம் சொல்கிறார்கள்;

ஒருமை என்பது யாதெனில்;

''தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும். மற்ற இடத்தில், தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது' என்கிறார் வள்ளலார்.

ஆக 'ஒருமை' என்பது

''தனது அறிவு, ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும்''.

ஒருமை = தனது அறிவு + ஒழுக்கமும்

'தனது அறிவு' என்பது அவரவர் பெற்றியிருக்கும் அறிவே.

ஆக 'தனது அறிவுடன்' (அவரவர் பெற்றியிருக்கும் அறிவுடன்) ஒழுக்கம் சேர்ந்து, அவை இரண்டும் ஒத்த இடத்தில் ஒருமை தானாக கூடும்.

இங்கு 'ஒழுக்கம்' எது? என வள்ளலார் குறிப்பிடும் போது;

''இதுகாறும் என்னொடு நீங்கள் பழகியும் சுத்தசன்மார்க்க ஒழுக்கம் இன்னதென்று தெரிந்து கொள்ளவில்லை.''. யாதெனில்;

இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்'' என்ற திருவார்த்தையதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாகவுடையது கடமை.''

இங்ஙனமாக ஒருமையை (அறிவையும் ஒழுக்கத்தையும்) பெற்றால் தான் தயவு என்னும் 'கருணை' வரும்.

இன்னும் முழுமையாக தெரிந்து தெளிவு அடைய 'மகாபேருபதேசத்தை' ஊன்றி வாசித்தே ஆக வேண்டும்.

அன்புடன் ஏபிஜெ அருள்.

## வள்ளலார் தெய்வமா?

## மற்ற ஞானிகளுக்கும் வள்ளலாருக்கும் உள்ள வேறுபாடு என்ன? நமக்கு வள்ளலார் யார்?

- ஏபிஜெ அருள்.

என்ன இப்படி ஒரு தலைப்பு என? நினைக்க வேண்டாம். இதோ வள்ளலாரே சொன்னது;

'----'தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாது இவ்வுலகத்தார் என்னைத் தெய்வமெனச் சுற்றுகின்றார்கள். ஐயோ! நம் சகோதரர்கள் தெய்வத்தைத் தெரிந்து கொள்ளாததினாலேயல்லவா நம்மைச் சுற்றுகிறார்கள்!' என்று நான் உள்ளும் புறமும் பரிதாபப்பட்டுக் கொண்டே இருந்தேன், இருக்கின்றேன், இருப்பேன். தெய்வத்தை ஏன் தெரிந்துகொள்ளவில்லையென்றால்: ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்தப் பதார்த்தத்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தையுள்ளபடி அனுபவித்தாலல்லது, தெய்வத்தினிடத்தில் பிரியம் வாராது. ஆதலால், தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற முக்கிய லக்ஷியத்திலிருந்து கொண்டு விசாரஞ் செய்துகொண்டிருங்கள்.'

ஆக, வள்ளலார் தெய்வமில்லை. அவதாரமும் இல்லை. வள்ளலார் நம்மை போல் மனிதரே. ஆனால், தனது ஒழுக்கத்தால், சத்திய அறிவால், இடைவிடாது கருணை நன்முயற்சியில், தனி வழியில், உண்மை கடவுள் நிலை காண சுத்த ஞான யோக நிலையில் இருந்து, உண்மை கடவுளை கண்டு தரிசித்து அருள் பெற்ற முதல் 'சுத்த ஞானியே' வள்ளலார்.

வள்ளலாருக்கும் மற்ற ஞானிகளுக்கும் உள்ள முக்கிய வேறுபாடு என்ன? எனில்; மற்ற ஞானிகளும் கடவுள் அருள் பெற ஒழுக்கமும் இரக்கமும் சாதனமாக கொண்டு தவம் செய்தவர்கள் தான். ஆனால் இவர்கள் அனைவருமே,

1) தத்தம் சமய மதங்கள் காட்டிய கடவுளையே முடிபாக கொண்டு அக்கடவுளையே கருத்தில் ஏற்றிக்கொண்டு அச்சமய ஆசார அடிப்படையில் தியானித்ததால், அந்த அளவுக்கு மட்டுமே சித்திகள் பெற்றார்கள். பெற்ற சித்திகளால் பெருமை கொண்டு, மக்களை ஆசீர்வதித்து வந்தார்கள்.

அல்லது

2) ஆண்டவரை இரக்கத்தால் நன்முயற்சி மற்றும் யோகத்தால் கடின தவமிருந்து பெரியளவு சித்திகளும் (பல நூற்றாண்டுகளாக வாழுதல்) பெற்ற ஞானிகளும் உண்டு. இந்த ஞானிகள் தாங்கள் பெற்ற சித்திகளால் நீண்ட ஆயுள் மட்டுமே அடைந்தார்கள்.

ஆனால்....

கடவுளை கண்ட வள்ளலாருக்கும் பல சித்திகள் அருளால் கிடைத்தது. பல சித்திகளை பெற்ற வள்ளலார் மீண்டும் கடவுளை நோக்கினார். கடவுள் வள்ளலாரிடம் ; என்ன? என்றதற்கு,

வள்ளலார் கீழ்வருமாறு வேண்டினார்:

'நான் பெற்ற இன்பம் என்னைப் போல் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும்' என்றார் வள்ளலார்.

இதை கண்ட கடவுள்;

தன்னிடம் என்ன கருணை உண்டோ அதே கருணையை பொது நோக்கத்தால் பெற்றுத் திகழ்ந்த வள்ளலாருக்கு 'பரிபூரண சித்திகள்' முழுவதையும் கொடுத்தருளினார். அவரின் தேகத்தையே தனி வடிவமாக்கி (ஒளி உடம்பு), தன்னை போலவே படைத்தல் முதல் அனைத்து செயல் செய்து மகிழும் நித்திய பேரின்ப பெருவாழ்வை தந்து அருளினார்.

வள்ளலாரை போல் வேறு எவரும் சாகாவரம் கேட்கவில்லை இங்ஙனமாக மற்ற அனைவருக்குமாக வேண்டி நிற்கவில்லை.

அன்பர்களே!

வள்ளலார் பெற்ற பேரின்பத்தை இன்று நாம் பெறுவதற்கு யாதொரு தடையில்லை. இதை வள்ளலாரே சத்தியமிட்டு நம்மிடம் உரைக்கிறார். தான் வந்த வழியில் எவர் ஒருவர் பழகி நன்முயற்சி மேற்கொள்கிறாரோ அவர் என்னை போல் ஏறாநிலை பெறுவது சத்தியமே என்கிறார்.

வள்ளலார் ஆண்டவரை குருவாக கொண்டார். நமக்கும் குரு ஆண்டவரை

வள்ளலார் உண்மை கடவுளை காணும் வரை தன் கருத்தில், ஓர் உண்மை கடவுள் உண்டென்றும் உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபட்டார். நாமும் இங்ஙனமாகவே கருத்தில் கொள்ள வேண்டும்.

எந்தவொரு ஆசாரமில்லாமல் உண்மை அன்பு உண்மை இரக்கம் மட்டுமே வழிபாட்டு சாதனமாக கொண்டார். நமக்கும் இதே சாதனம்.

சரி, அப்படின்னா,வள்ளலாருக்கும் நமக்கும் உள்ள உறவு?

ஆம், வள்ளலார் உண்மை கடவுள் குறித்து விசாரிக்கும் போது அவருக்கு துணையாருமில்லை. ஆனால் நமக்கோ வள்ளலார் துணை இருக்கிறது.உண்மை கடவுளை காண உண்மையாக ஆசை உள்ள எவருக்கும் எல்லாவகையிலும் வள்ளலார் துணை இருக்கும் பாக்கியத்தை பெற்றுள்ளதை நாம் சத்தியமாக உணருதல் வேண்டும்.

ஆக நமக்கு இனி, 'வள்ளலார் துணை' உண்டு. அவர் தம் வழியில் விரைந்து பெறுவோம் 'ஆண்டவர் அருளை'

சுத்த ஞானி வள்ளலார் துணையுடன் சுத்த சிவநிலை கண்டோம், காண்கிறோம், காண்போம். இது சத்தியம். இது சத்தியம்.

(அன்புடன் ஏபிஜெ அருள்).

# 'சாதி' பற்றி வள்ளலார்.

நான் இந்த சாதி என்ற வாய் வழக்கை தவிர்க்க வேண்டும். சாதி விட வேண்டும். சாதி நீக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளலார். இங்ஙனம் சாதி, குலம், சமயம் மதம் தவிர்த்தவர் உள்ளத்திலே இறைவன் தன்னை வெளிப்படுத்தி அருள் பாலிக்கிறார் என்கிறார் வள்ளலார்.

தொழில் நியாயத்தை அனுசரித்து ஜாதிகள் ஏற்படுத்தப் பட்டது. ஆனால் ஒருவன் அத்தொழிலை தொடர்ந்து செய்யாவிட்டாலும் சாதி ஒட்டிக்கொண்டது. பிற்கால வேதங்கள், புராணங்கள், உபதேசங்கள், மதநூல்கள், இனம், நிறம், பிறப்பு அடிப்படையில் சாதியை நிலைநாட்டியது. இந்த அழுத்தமான சாதி பொதுநோக்கத்தை தராது. எல்லாரிடத்திலும் கருணை தராது. அதனால்தான் சாதி சமய கட்டுப்பாடு ஆசாரங்கள். கருணை விருத்திக்கு தடையாக உள்ளது என்கிறார் வள்ளலார். 'சாதி'விட்டொழிப்போம் சமரசம் காண்போம். ஆண்டவன் அருள் பெறுவோம்.

**அன்புடன் : ஏபிஜெ அருள்.கருணை சபை.**

இதோ வள்ளலாரின் பாடல்கள்:-

- ★ சாதியு மதமுஞ் சமயமும் பொய்யெனஆதியி லுணர்த்திய வருட்பெருஞ் ஜோதி
- ★ சாதிமதம் சமயமுதற் சங்கற்ப விகற்பம்எலாம் தவிர்ந்து போக ஆதிநடம் புரிகின்றான் அருட்சோதி எனக்களித்தான் அந்தோ அந்தோ.
- ★ சாதியும் சமயமும் தவிர்த்தவர் உறவே தனிநட ராஜஎன் சற்குரு மணியே.
- ★ சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலேசாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலேஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர் அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ கலவே
- ★ சாதிகுலம் என்றும் சமயமதம் என்றுமுப நீதிஇயல் ஆச்சிரம நீட்டென்றும் - ஓதுகின்ற பேயாட்ட மெல்லாம் பிதிர்ந்தொழிந்த வேபிறர்தம் வாயாட்டம் தீர்ந்தனவே மற்று.
- ★ சாதி ஆச்சிரமா சாரம் சமயமதா சாரம் எனச் சண்டையிட்ட கலக வழக்கு வெளுத் தது
- ★ சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே சத்தியச் சுத்தசன் மார்க்க வீதியில் உமைத்தான் நிறுவுவல் உண்மை விளம்பினேன் வம்மினோ விரைந்தே.
- ★ சாதிமதந் தவிர்த்தவரே அணையவாரீர் தனித்தலைமைப் பெரும்பதியீர் அணையவாரீர்
- ★ இருட்சாதித் தத்துவங்கள் எல்லாம்போ யினவா எங்கணும்பே ரொளிமயமாய் இருந்தன
- ★ சாதி சமயச் சழக்கெலாம் அற்றது சன்மார்க்க ஞான சபைநிலை பெற்றது
- ★ சாதி சமயச் சழக்கைவிட் டேன்அருட்சோதியைக் கண்டேனடி - அக்கச்சி சோதியைக் கண்டேனடி.
- ★ சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே

★ அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதிஉணர்ந் தோர்புகழும் சமரசசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப் பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந்தேனே. நன்றி APJ.அருள்

**மரம், புல், நெல் முதலிய இவைகளும் உயிர்கள் தானே, அப்படியிருக்க தாவரங்களை உண்பதும் இறைச்சி உணவு ஆகாதா? இதற்கு பதில் என்ன?**

உயிர் இரக்கம் கொள்ளுங்கள் என நாம் சொல்லும் போது, தாவரத்தை நீங்கள் உண்கிறீர்களே அது தப்பு இல்லையா? என்பதற்கு இந்த விசாரம் பதில் தரும். ஜீவகாருண்யம் என்பது எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் பாவிப்பதும், பிற உயிர்களுக்கு துன்பம் கொடுக்காமலும், முடிந்த வரை மற்ற உயிர்களுக்கு உபகாரம் செய்தலே.



ஆக, இங்கு நாம் காண வேண்டியது;

தாவரங்களுக்கு உயிர் உண்டா? நாம் துன்பம் கொடுக்கிறோமா?

இதற்கு வள்ளலார் விளக்கம் பார்க்கையில்;

'ஆம், தாவரங்களுக்கு உயிர் உண்டு. ஆனால் அப்படி அல்ல என்கிறார்கள்.'

அதாவது , இவை தொடுஉணர்வு கொண்ட ஓரறிவு உயிர்.ஆனால் தாவரவுடம்பில் உயிரானது, நீர் வழியாக நில பக்குவ அடிப்படையில் அதன் 'வித்தில்' ஏறுகிறது. வளர்ந்த தாவரங்கள் அதாவது முளைப்பருவம் தாண்டிய தாவரங்களை உண்பதினால் அவைகளுக்கு துன்பம் ஏற்படாது.காரணம், மனம் என்ற கரண



கருவிகள் தாவரங்களுக்கு கிடையாது. நம்மிடம் உள்ள நகங்களை வெட்டும் போது எப்படி வலி ஏற்படாதோ அது போன்று தாவரங்களை வெட்டும் போது துன்பம் அவைகளுக்கு ஏற்படாது. ஆனால் அதற்கு உயிர், நீர் வழியாக அதன் வித்தில் ஏறுகின்றதால், முளைப் பருவத்தில் தாவரங்களை உண்பது கூடாது என்கிறார் வள்ளலார். வளர்ந்த பின்பு காய் கனி இவை சடமாகி விடுவதாலும், உணவிற்காக இவை எடுத்து பயன்படுத்தும் போது துன்பம் எவையும் இவை பெறாதாலும் இவை இறைச்சி உணவாகாது.

வள்ளலாரின் இதுகுறித்த தந்த நீண்ட விளக்கம் அப்படியே கீழே தரப்படுகிறது.

' .... ஆனால் மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிராகவே சொல்லப்படுகின்றனவே, அவைகளை இம்சைசெய்து ஆகாரமாகக் கொண்டால் அவை தாமச ஆகார மல்லவோ, அதனால் வந்த சந்தோஷம் அசுத்த மனோகரண சந்தோஷமல்லவோ என்னில்:- மரம் புல் நெல் முதலான தாவரங்களும் உயிர்கள்தான். அவைகளை இம்சைசெய்து ஆகாரங்கொண்டால் அது ஏகதேச தாமச ஆகாரந்தான். அந்த ஆகாரத்தால் வந்த சந்தோஷமும் அசுத்தாகரண சந்தோஷந்தான். ஆனாலும் அப்படியல்ல. மரம் புல் நெல் முதலான சீவர்கள் பரிசமென்கிற ஓரறிவையுடைய சீவர்களாதலாலும், அவ்வுடம்பில் சீவவிளக்கம் ஒருசார் விளங்குதலாலும், அவ்வுயிர்கள் தோன்றும் வித்துக்களும் மற்ற வித்துக்கள் போல் சயமாதலாலும், அவ்வித்துக்களை நாமே விதைத்து உயிர் விளைவு செய்யக் கூடுமாதலாலும், அவ்வுயிர்களை வேறுசெய்யாமல் அவ்வுயிர்களினிடத்து உயிரில்லாமல் உயிர் தோன்றற்கிடமான சடங்களாகத் தோன்றிய வித்துக்களையும் காய்களையும் கனிகளையும் பூக்களையும் கிழங்குகளையும் தழைகளையும் ஆகாரங்களாகக் கொள்வதேயன்றி அவ்வுயிருள்ள முதல்களை ஆகாரமாகக் கொள்ளாதபடியாலும், அவைகளில் வித்து காய் கனி முதலானவை கொள்ளும்போது சுக்கிலம் நகம் ரோமம் முதலிய வைகளை வாங்கும் போது இம்சை உண்டாகாமை போல் இம்சை